# தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
## TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiammam Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Website: www.tnteu.ac.in; Email:registrar@tnteu.ac.in


**No.TNTEU/R/Admin/ 2025/** 01642 **Date: 14.11.2025**

**Dr.K.Rajasekaran, Ph.D.,** ***WEB POST***
Registrar i/c

பெறுநர்:

முதல்வர்கள் / செயலர்கள்,
இணைவு பெற்ற அனைத்து கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

**அய்யா / அம்மையீர்,**

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - சமுக நலன் மற்றும் மகளீர் உரிமைத் துறை- 2025-ஆம் ஆண்டு நவம்பர் 14 முதல் நவம்பர் 20 வரை ஒரு வாரகாலம் குழந்தைகளுக்கான வாரமாக கொண்டாடுதல் - தொடர்பாக.

**பார்வை:** கடித எண்:12204666/சந(1)/2025-1, நாள்: 07.11.2025.

-----------

மேற்காண் பார்வையின்படி, அரசு செயலாளர், சமூக நலன் மற்றும் மகளீர் உரிமைத்(சந.5) துறை கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார். 2025, நவம்பர் -14 தேசிய குழந்தைகள் தினமாகவும் , நவம்பர் -20 உலக குழந்தைகள் தினமாகவும் இந்திய அளவிலும் உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறது. எனவே, நவம்பர் -14 முதல் நவம்பர் -20 வரை உள்ள ஒருவார காலத்தினை "குழந்தைகள் வாரமாக" கொண்டாடுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

2. மேலும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் குழந்தைக்களுக்கான வாரத்தை கொண்டாடும் வகையில் குழந்தைகள் பிறந்த முதல் 1000 நாட்களின் முக்கியத்துவத்தை, அந்த நாட்களில் அவர்களுக்கான தகுந்த ஊட்டச்சத்தை உறுதி செய்வதன் தேவையை உணர்த்து வகையிலான நிகழ்வுகளை அங்கன்வாடி பணியாளர்கள் முன்னேடுக்குமாறு உரிய அறிவுறுத்தல்கள் வழங்குமாறு இயக்குநர் மற்றும் குழம இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

3. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகளில் , குழந்தைகளுக்கான வாரத்தை கொண்டாடும் வகையில் குழந்தை உரிமைகள் மற்றும் பாதுகாப்பு சார்ந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்திடதக்க நடவடிக்கை மேற்கொள்ளுவது தொடர்பாக தக்க அறிவுரைகளை வழங்கிடுமாறு குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்கறேன்.

4. 2025 நவம்பர் -14 முதல் நவம்பர் -20 வரை உள்ள ஒருவார காலத்தினை "குழந்தைகள் வாரமாக" அனைத்து மாவட்டங்களில், குழந்தைகளின் பெற்றோர், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உள்ளடக்கி ஒருங்கிணைந்து சிறப்பாக கொண்டாட அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்(ICDS), மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ஆகியோரை அறிவுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்

பதிவாளர் (பொ)

**இணைப்பு**: மேலே குறிப்பிட்டுள்ளவாறு.

**நகல்:**

அரசு செயலாளர்,
சமூக நலன் மற்றும் மகளீர் உரிமைத்(சந.5) துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600009.

அனைவருக்கும் வணக்கம்!

வருகின்ற 14 நவம்பர் 2025 (இந்திய குழந்தைகள் தினம்) முதல் 20 நவம்பர் 2025 (உலக குழந்தைகள் தினம்) வரையிலான காலகட்டத்தை குழந்தைகளுக்கான வாரமாக அனுசரிக்கக் கோரி தமிழ்நாடு அரசின் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மகிழ்ச்சியான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. இதை அடுத்து துறைக்கு உட்பட்ட மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு உள்ளிட்ட பல்வேறு துறைகள் இது சார்ந்த தொடர் செயல்பாடுகளுக்குத் தயாராகி வருகிறது. நமது கல்லூரிகளில் குழந்தை உரிமைகள் குழுக்களின் குழந்தைகள் வார அனுசரிப்பு நிகழ்வுகளுக்கு இந்த உத்தரவின் அடிப்படையில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகளை அணுகலாம். இந்த குறிப்பிட்ட வாரத்தில் குழந்தைகள் வாரத்தை அனுசரிக்க இயலாதவர்கள் நவம்பர் 30 வரை அதற்கான செயல்பாடுகளை முன்னெடுக்கலாம் என்பதையும் இத்துடன் குறிப்பிட்டுக் கொள்கிறோம். குழந்தைகளுக்கான ஒரு உகந்த உள்ளடக்கிய உலகத்தை சூழலை உருவாக்க இணைந்தே பயணிப்போம்!

நன்றி!